# Politics in Tamil Epics

**P. Vasuki**
*Doctoral Research Scholar, Department of Jainology*
*University of Madras, Chennai*

**Dr. Priyadarsana Jain**
*Department of Jainology,*
*University of Madras, Chennai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.18981640

**Abstract**

*It is essential to understand the political ethics embedded in Tamil epics, their relevance in the modern era, the conflicting ideas within them, and the shifts in their perspectives today. The key political concepts found in Silappathikāram, Jivaka Chintāmani, and Chulāmani are remarkable. Silappathikaram explains that a king's righteous rule (Sengōl) is the foundation for people's security and it describes administrative structures like the "Aimberunkuzhu" (Council of Five) and the "Enperāyam" (Council of Eight) that existed during the era of the three Great Tamil dynasties (Chera, Chola, and Pandya). In Jivaka Chinthamani, the author highlights the destruction caused when King Sachandan neglected his duties and succumbed to lust and Jeevakan's commitment to duty despite numerous hardships. The epic Chulamani emphasises the importance of ministerial advice and depicts the relationship between the people and the king as that of a body and its soul. If modern rulers and the younger generation adopt the life ethics and the wisdom of ministers depicted in these ancient epics—with necessary modifications—it will pave the way for non-violent good governance and help in resolving global problems and issues.*

***Keywords:*** *Chinthamani, Chulamani, Aimberunkuzhu, Enperāyam*

**References**

1. Pulavar Nemi. Baskaradass, Ainchiru Kappiyangal – Chulamani, Tamil Nilayam,Chennai-600017, 2014
2. A. P. Aravazhi , Kappiya Malargal, Vardamanan Pathippagam, Chennai-600017, 2017
3. Dr. U. V. Swaminatha Iyer, Jeevaka Chintamani - Original text and commentary, Dr. U. V. Swaminatha Iyer library, Chennai-600090, 2022
4. Professor J. Srichandran, Jeevaka Chintamani -Original text and commentary, Tamil Nilayam, Chennai-600017, 2012
5. Dr. M. S. Srilakshmi, Aimperum Kāppiyaṅkaḷil Tamiḻar Vāḻviyal, Singapore, 2016

# தமிழ்க் காப்பியங்களில் அரசியல்

*பெ. வாசுகி*
முனைவர் பட்ட ஆய்வாளர்
சமணவியல்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

*முனைவர் பிரியதர்சனா ஜெயின்*
சமணவியல் துறை, சென்னை பல்கலைக் கழகம்
சேப்பாக்கம், சென்னை

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் மறைந்திருக்கும் அரசியல் சிந்தனைகள் பல்வேறு விதமாக நமக்கு வழிகாட்டுகின்றன. பண்டைக்காலத்தில், அரசர், அமைச்சர்கள் மற்றும் மக்கள், அவரவர் பங்கினை எவ்வாறு செவ்வனே செய்தனர் என்பதைக் காப்பியங்கள் வாயிலாக அறியலாம். தமிழ் அரசர்களின் நெறி தவறாத, செம்மை மிக்க அரசாட்சிகளுக்கு சான்றுகள் பல இருப்பினும், அறியப்படாத சிலவற்றை அறிவோம்.

ஐம்பெருங்காப்பியங்களில், சிலப்பதிகாரத்தில், அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என அரசியல் அறம் வலியுறுத்தப்படுவதைக் காணலாம். காவலன் காவல் இன்றெனில் இன்றாம், மாதவர் நோன்பும் மடவார்தம் கற்பும் என்றபடி, அரசன் நன்முறையில் ஆட்சி செய்தால் மட்டுமே பெண்டிர் முதல் துறவியர் வரை அனைவரும் எக்கவலையுமின்றி தம்மைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும். இன்றும் நம் எல்லைக்கண் வீரர்கள் இரவு பகல் பாராமல், குளிரையும் வெப்பத்தையும் பொருட்படுத்தாமல் காவல் இருப்பதால் மட்டுமே நாமும் இங்கு நம் பணியில் அமைதியாக ஈடுபட முடிகின்றது.

பிரிட்டிஷ் அரசு நம்மை ஆளுவதற்கு முன்பே தமிழகத்தில் மூவேந்தர்கள் 'ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும்' **(26.38)** அமைத்து நல்லாட்சி புரிந்துள்ளனர் என்பதை, '..பார்த்திவர்க்கு ஐம்பெருங்குழு வெனப்படுமே' என்றும், 'அரைசொடுபட்ட ஐம்பெருங்குழு' **(3.126)** என்றும், '..இனையர் எண்பேராயமென்ப' என்றும் இளங்கோவடிகள் சுட்டுவதிலிருந்து அறிகிறோம். அமைச்சர், புரோகிதர், சேனாதிபதி, தூதுவர், சாரணர் (ஒற்றர்) இவர்கள் ஐம்பெருங்குழுவினர்.

கரணத்தியலவர் (ஆட்சிப்பணிஅலுவலர்), கருமக்காரர்(கட்டளைகளைநிறைவேற்றுபவர்), கனகச்சுற்றம் (கருவூலகாப்பாளர்), கடை காப்பாளர் (அரண்மனை வாயில் காப்பாளர்), நகர மாந்தர் (பிரதிநிதிகள்), படைத் தலைவர், யானை வீரர், (இவுளி) குதிரை மறவர், இவர்கள் எண்பேராயத்தினர் (அடியார்க்கு நல்லார் உரை). அரசியல் சுற்றம் என கரும வினைஞர், கணக்கியல் மற்றும் தந்திர வினைஞர்களும், அமைச்சர், தானைத்தலைவர், தருமவினைஞர் ஆகியோர் தகுந்த நேரத்தில் முடிவெடுக்க உத வினர் என்று இளங்கோவடிகள் உரைக்கிறார் **(26.40,41)**.

கண்ணகி, பாண்டியன் அவையில் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் போது, சோழராட்சி பற்றி கூறுகிறாள்.

**"புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்**
**வாயிற்கடைமணி நடுநாநடுங்க**
**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடைத்தான் தன்**
**அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்**
**பெரும் பெயர்ப் புகாரென பதியே.."**

**-சிலம்பு, 20.51-56**

புறா போன்ற ஒரு சிறு பறவையின் துயர் துடைக்கத் தன் சதை ஈந்த சிபி மன்னனும், பசுவின் கண்ணீருக்குத் தன் மகனைத் தேர் சக்கரத்திலிட்டுக் கொன்ற நீதி தவறா மனுநீதிச் சோழனும் ஆண்ட ஊர் புகார் என மொழிவது காண்க. எவ்வுயிர்களிடத்தும் கருணையும் அன்பும் கொண்ட அரசர்கள் ஆண்ட நாடு இத்தமிழகம். இன்று உயிருக்கு மதிப்பில்லை.

திருத்தக்கதேவர் இயற்றிய சீவக சிந்தாமணியில்,

ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன், (சீவகனின் தந்தை) அரசி விசையையின் மேனியழகில் மயங்கி, கணமும் அவளைப் பிரிய மனமின்றி, சிறிது காலம் அந்தப்புரத்தில் மகிழ்ந்திருக்க எண்ணி, தன் நம்பிக்கைக்குரிய, உயிர் நண்பன், அமைச்சன் கட்டியங்கரனிடம் நாட்டுப் பொறுப்பை ஒப்படைத்து, தன் கடமையைக் கைவிட்டு விட்டான். அரசன் முடிவைக் கேட்ட அரசவையினர் இடி விழுந்த நாகம் போல் கலங்கினர்.

நம்பிக்கைக்குரிய நிமித்திகன் என்னும் அமைச்சன், இதனால் தீங்கு விளையும், அவன் அபாயமானவன்; நிலமும் திருவும் உம்மை விட்டு நீங்கும் என்றான் (204). அதற்கு அரசன், கட்டியங்காரன்பலபோரில்எனக்குவெற்றியைக் கொடுத்தவன்;தீங்குசெய்யமாட்டான்என்றான் (205). நிமித்திகன் மேலும், அமைச்சர் சொல் வழி நடந்தால் தீங்கு அன்று; மங்கையரிடம் கொண்ட மோகம் தீமை தரும் (206), என எடுத்துக்காட்டுகள் பல கூறினான்.

பிரம்மன், திலோத்தமையை விரும்பி, நிலைக்கெட்டு, பழிக்கு ஆளாயினான் (207);

உமையொருபாகன், தன்னில் ஒரு பாதி கொடுத்துப் பார்வதியைப் பெற்றுப் பழிப்பிற்கிடமாயினான் (208);

கண்ணன், கோபியரால் பழிக்கு இடமானான் (209);

புத்தன், ஆண் கழுதையின் காமத்தைத் தணிக்கப் பெண் கழுதையாய்ச் சென்றுப் பழி ஏற்றான் (210);

பாண்டவர் ஐவரும் ஒருத்தியை மணந்து பழிக்கப்பட்டனர் (211). அதலால் மதியை இழக்கலாகாது என்று கூறினான். உருத்திர தத்தன் என்பவனும், “உன் ஆசை மனைவிக்கே இது தீங்காய் முடியும்” என்று எடுத்துரைத்தான் (212). இருவர் கூற்றையும் அரசன், காமச் செருக்கால் புறந்தள்ளி விடுகிறான்.

நல்அமைச்சர்கள் அரசனுக்குக் கூறிய அறிவுரை அவர்களின் நூற்கேள்வி அறிவைப் புலப்படுத்துகிறது.

கட்டியங்காரன் சூழ்ச்சி புரிந்து போர் தொடுக்கும் வேளையில், சச்சந்தனின் அறிவு விழித்துக் கொள்ள, அவன் கருவுற்றிருந்த அரசியை மயில் பொறி ஒன்று செய்து அதில் ஏற்றி தப்பிக்க செய்கிறான். சச்சந்தன் போரில் இறந்தான். கட்டியங்காரன் நாட்டைக் கைப்பற்றினான். மயில்பொறியில் சென்ற விசயை, சுடுகாட்டில் மகவு பெற்றெடுத்தாள். கந்துக்கடன் என்னும் வணிகன், மகவினை எடுத்துச் சென்று சீவகன் எனப்பெயரிட்டு வளர்த்தான். சீவகன் வளர்ந்து, அனைத்து படைக்கல பயிற்சியும் பெற்று, நாட்டை மீட்கிறான். தனியாகப் பிறந்த சீவகன், சுற்றமும் நட்பும் வேண்டியும், அரசியல் நிர்பந்தம் காரணமாகவும், எண்மரை மணந்தாலும், தன் தந்தை போல் காமத்தில் மூழ்கிக் கிடைக்கவில்லை. தன் கடமையை மறக்கவில்லை. நல்லாட்சி புரிந்து, பின் துறவு மேற்கொண்டு வீடுபேறு எய்துகிறான்.

மனைவியிடம் கொள்ளும் புலனின்பமும் மிதமாக, வரைமுறையுடன் இருத்தல் வேண்டும். அன்றேல் இம்மையில் பழியும் மறுமையில் நரகமும் புகுத்திவிடும்.

இத்தகைய அறிவுரைகள் இன்று, அரசியலில் இருப்பவர் மட்டுமன்றி, சமூக உயர் மட்டத்தில் உள்ளவர்கள், பிரபலங்கள், மாணவர்கள், இளம் பருவத்தினர் ஆகிய அனைவருக்கும் மிகவும் தேவை. பேராசையும், காம உணர்வும் மிகுந்து, தகாத செயல்களில் ஈடுபடும் இன்றைய மாந்தருக்கு மெய்யை உணர்த்த, ஒழுக்கத்தின் மாட்சி புரிய வேண்டும்.

அன்றைய அரசர்கள் மந்திர ஆலோசனை கூட்டியே தங்கள் முடிவுகளை எடுத்தனர்.

ஆனால் சச்சந்தன் தன்னிச்சையான தன் முடிவை வெளிப்படுத்தவே மந்திர ஆலோசனை அவையைக் கூட்டினான். பின்னாளில் சீவகன் மந்திர மண்டபத்தில் மக்களின் நலனுக்கும், தனக்கு உதவியவருக்கும் பல நலத்திட்டங்களை இயற்றினான்.

இன்றும் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆனால் இடையே பல பரிமாற்றங்கள், கையூட்டுகள், சிபாரிசுகள் என ஒரு காரியம் முடியும் போது, அது சிறுத்து, உருமாறிப், பின் தனிமனித லாபக்கணக்கால், மக்கள் நலம் மெலிந்தே போகிறது.

ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான சூளாமணியில், நாட்டு அரசியல், மக்கள் நிலை, பெண்கள் நிலை என சமுதாயத்திற்குத் தேவையான பல விடயங்கள் உள்ளன. அரசியல் பற்றிய சில கூற்றுகள்;

போதனபுரத்து மன்னன் பிரஜாபதி பயாபதி-காப்பிய நாயகன் திவிட்டனின் தந்தை) பிரஜைகளுக்குப் பதி; மக்கள் உடல் எனில், மன்னவன் உயிராய் இருந்தான். வேண்டியவர் வேண்டாதவர் பாகுபாடின்றி கட்டளையிடுவான்; படைபலம் மிக்கவன்; ஆனால் இருவகைப் பகையும் அற்றவன். உட்பகையானது, காமம், வெகுளி, மயக்கம், கடும்பற்று, செருக்கு, பகை என ஆறாகும். இவற்றோடு வேறு வெளிப்பகை ஏதும் இல்லாதவன். மன்னனின் மூன்று நிழல்கள்: அவனடி நிழல் சிற்றரசர்களைப் பாதுகாக்கும், முடி நிழல் முனிவர்கள் பாதத்தில் படியும், குடை நிழல் உலக உயிர்கள் எல்லாம் குளிர, இன்பம் அடையச் செய்யும்.

***“அடிநிழலரசரை யளிக்கு மாய்கதிர்***
***முடிநிழன் முனிவரார் சரண மூழ்குமே***
***வடிநிழல் வனைகதி ரெஃகின் மன்னவன்***
***குடைநிழலுலகெலாங்குளிர நின்றதே”***

**சூளாமணி-55**

நாட்டில் கொலை கருவிகளுக்கு வேலை இல்லை, மன்மதனின் கணைப் போன்ற அன்புக் கணையே பொருந்தியிருந்தது. பகைவர்களைத் தன் வழிபடுத்த இவன் பணிவு கலந்த புத்தியையே கையாண்டான், சினத்தையல்ல! மக்களைப் பற்றிக் கூறும் போது மக்களே அவர்கள் வருமானத்தில் ஆறில் ஒரு பங்கை வரியாக செலுத்தினர். அதுவே அவர்கள் தர்மம் எனக் கருதினர். மன்னனும் மக்கள் மனமுவந்து தருவதை மட்டுமே பெற்றுக் கொண்டான். துன்புறுத்தவில்லை. தனிமனிதன் தன்னிறைவு பெற்றிருந்தான். *(51-58)*

இன்று இவ்வுலகில் ஓரளவு நன்கு வாழ வேண்டுமாயின் வரி செலுத்த வேணடும். உண்டாலும், உடுத்தாலும், எங்கு சென்றாலும், இறந்தாலும், அனைத்திற்கும் வரி. பண்டைய வேந்தர்கள், பகை நாடுகளை வெற்றி கொண்ட நேரத்திலும், அரச வாரிசு பிறந்த சமயங்களிலும் கறை, வரி நீக்குதல், நில தானங்கள், அறச்சாலை, கோயில் கட்டுதல் என பல நற்காரியங்களைச் செய்துள்ளனர் என காப்பியங்களிலும் சங்கத் பாடல்களிலும் காணலாம்.

போதனபுரத்து அமைச்சர்களால் ஆள்பவன் மேன்மை அடைந்தான். அமைச்சர்கள் அவன் குறிப்பறிந்து நடந்தனர். அவன் அறியாமல் எதையும் செய்யமாட்டார்கள். நாட்டுக்கு விளையும் கேடுகளைத் தடுக்கும் ஆற்றல் படைத்தவர்கள்; அறநூல்கள் பயின்றவர்கள்.

அரசாட்சி என்பதை ஒரு இயந்திரமாக உருவகப் படுத்துகிறார் தோலாமொழித் தேவர்.

***“மந்திரக் கிழவர் கண்ணா(க), மக்கள் தன் தாள்களாக,***
***சுந்தரவயிரத் திண்தோள் தோழராகச் செவிகள் ஒற்றராக***
***அந்தர உணர்வு நூலா(க) அரசு எனும் உருவு கொண்ட***
***எந்திரமிதற்கு வாயா(க)த் தூதுவர் இயற்றப்பட்டார்”***

***- தூதுவிடு சருக்கம்-565***

***(அரசன் - இயந்திரம், மந்திரிகள் - கண்கள், மக்கள் - கால்கள், தோள் சேர்ந்து நடப்பவர் - தோழர், ஒற்றர் - செவிகள், தூதுவர் - வாய், நூலறிவு - நுண்ணறிவு).***

மன்னன் பிரஜாபதி துறவு ஏற்க முடிவு செய்கையில், மந்திராலோசனைக் கூட்டி

அமைச்சர்கள் ஆலோசனைக் கேட்டு, யாவர் மனமும் இசைந்தபின், தன் கடமைகளை முடித்து, பின் துறவு ஏற்கிறான்.

சூளாமணி காப்பியத்தில், வித்யாதர உலகில், 'சுவலனசடி' என்ற நீதி வழுவாத அரசன், தன் மகள் சுயம்பிரபைக்கு, அவள் விருப்பப்படி மணம் முடிக்க விரும்பினான் யாருக்கு மணம் முடித்தாலும் அவள் மறுக்கப் போவதில்லை; எனினும் கவலைக் கொண்டான். பெற்றோர் திருமண விஷயத்தில் பிள்ளைகளின் மனதைத் தெளிவாக அறியாமல் அவசரப்பட்டால், அது வினையாக முடியும் என அன்றே அறிந்திருந்தான் போலும்.

பொன்னில் பதிக்க வேண்டிய உயர்ந்த மாணிக்கத்தைத் தவறி மங்கலான ஈயத்தில் பதித்தாலும் ஒளி குன்றாமல், ஒளி வீசும். ஈயத்திற்கே பெருமை சேர்க்கும். அதுபோல் நல்ல குலத்திலுதித்த பெண்கள் தனக்குப் பொருந்தாதவனாயினும், பெற்றோர் அமைத்துக் கொடுத்த வாழ்க்கையை ஏற்று, பெற்றோரையும், கணவனையும் குறை கூறாமல், வெறுத்து ஒரு சொல் நாவில் வராமல் காப்பர்.

**"பொன்கலக்குரிய வாம் பொருவின் மாமணி.**
**நொந்துதான் பிறிதுரை நொடிய வல்லரோ**
***(இரதநூபுர சருக்கம்-230-231)***

பெற்றோர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனக் கருதி, மகளுக்கு ஏற்ற துணையைத் தெரிவு செய்ய ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினான். அமைச்சர்கள் ஒவ்வொருவரும் நாட்டுநலனை கருத்தில் கொண்டும், சுயம்பிரபைக்கும் ஏற்றவனைத் தேர்ந்தெடுக்க மெய்ப்பட யோசனைகள் பலகூறி, பின் கற்றுணர்ந்த நிமித்திகன் கூற்று படி, காலம் கனிந்தபின், காப்பியநாயகன் திவிட்ட நம்பிக்கு மனம் முடித்தனர். இவ்வாறு திருமணங்கள் சிறப்பாக நடந்தன. அக்காலத்தில் அனைவரும் அடுத்தவர் அகமறிந்து வாழ்ந்தனர் என்பதும், நாட்டுத் தலைவனும், அமைச்சர்களும், மக்களும், எப்படி வாழ வேண்டும் என்பதும் புலனாகிறது அல்லவா?

## முடிவுரை

இக்காப்பியங்களில் சிலவற்றையாவது பயின்றுவிட்டு அரசாட்சி செய்தால் நல்லாட்சி அமையும். வன்முறை, போர், சுற்றுச்சூழல், மற்றும் பொருளாதாரம் எனப் பல உலகப் பிரச்சினைகளை எளிதில் தீர்க்கமுடியும். தமிழ் இலக்கியங்கள் மூலம் அரசியல், வாழ்க்கை நெறிகளைத் தாண்டி, அறம் பல அறிந்து, சாதனைப் புரியலாம். இக்கட்டுரை, வரையறுக்கப்பட்ட அளவிற்குள் முயற்சிக்கப்பட்டதே அன்றி முழுமையானதல்ல. மேலும் ஆய்வுக்கும் தொகுப்பிற்கும் உட்பட்டதே.